بسم الله الرحمن الرحيم

புகழனைத்தும் எல்லாம் வல்ல அல்லாஹ் ﷻ ஒருவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் எங்கள் கோமான் நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது கிளையார்கள், நற்றவத்தோழர்கள், நல்லடியார்கள், அவ்லியாக்கள், நம் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக.
ஆமீன்.

أَفَمَنْ شَرَحَ اللَّهُ صَدْرَهُ لِلإِسْلامِ فَهُوَ عَلَى نُورٍ مِنْ رَبِّهِ

“எவரின் இதயத்தை இஸ்லாத்தை அடைவதற்காக அல்லாஹ் ﷻ விசாலப்படுத்தியிருக்கிறானோ அவர் அவரது இரட்சகனான அல்லாஹ்வின் ஒளியில் இருக்கிறார்”. (அல் குர்ஆன் 39:22)

உளத்தூய்மையே ஆன்மீகத்தின் அடிப்படையாகும். அதுவே இஸ்லாத்தின் அதியுயர் போதனையுமாகும். இறைவனுக்காகவும் இஸ்லாத்துக்காகவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அகச்சுத்தம் கொண்ட சூபியாக்கள் இறைக்காதலில் தன்னையும் தனது அம்மாரத்தையும் அழித்தொழித்த செம்மல்கள். இவர்கள் நபிகளாரது காலத்தில் வாழ்ந்த அஸ்ஹாபுஸ் ஸுப்பாக்கள் (திண்ணைத் தோழர்கள்) வழி வந்தவர்கள். அவர்கள் இறைவனது நேரடியான ஒளியில் பார்க்கிறார்கள் அவனது பிரகாசத்தில் மின்னுகிறார்கள். மானிட சமூகம் உலகாயுத மோகங்களில் மூழ்கி, அறநெறிபிரண்டு, சீர்வழி மறந்திடாதிருக்க இறைவழியில் தம்மை அர்ப்பணித்த மனிதப்புனிதர்கள்.

اتقوا فراسة المؤمن؛ فإنه ينظر بنور الله

“இறைநேசர்களின் உய்த்துணரும் பார்வையையும் விளக்க சக்தியையும் பயந்துகொள்ளுங்கள் ஏனெனில் அவர்கள் அல்லாஹ் ﷻ வின் பிரகாசத்தைக் கொண்டு பார்க்கிறார்கள்”. (திர்மிதி) என்ற நபிகளாரின் பொண்மொழியும் மேற்கூறிய இறைவசனத்தை மேலும் தெளிவுபடுத்துகின்றது. இவ்வுலக ஜீவியத்தில் மாத்திரமன்றி நித்திய ஜீவியத்திலும் வல்ல அல்லாஹ் ﷻ வின் நூரால் அகிலமெங்கும் அருளொளி பரப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் அணுவளவேனும் ஐயமில்லை.

எனவேதான், இறையன்பைப்பெற்ற நல்லடியார்கள் இஸ்லாத்தின் எழுச்சியில் வரலாறு நெடுகிலும் சன்மார்க்கத்தின் தூண்களாயிருந்துள்ளார்கள். இஸ்லாத்தின் அகநெறியான ஷரீஅத்தையும் புறநெறியான தஸவ்வுபையும் ஒன்று மற்றொன்றை விட்டுப் பிரியா வண்ணம் ஈமானிய உணர்வை மனித உள்ளங்களில் விதைத்தார்கள். தொடர்ச்சியான அவ்ராதுகள், உள அமைதியை ஏற்படுத்தும் திக்ருகள், தியானங்கள் போன்ற பயிற்சிகள் மூலம் இறைவனை நெருங்குகின்ற வழிமுறைகளை நடைமுறைகளாக்கி தங்களது சிஷ்யர்களைப் பக்குவப்படுத்தினார்கள்.

இவ்வாறானதொரு ஆன்மீகப் பின்புலத்தில் தோன்றி இலங்கையின் நாலாபுறங்களிலும் மெஞ்ஞான விளக்கேற்றிய செம்மலே எங்களது சங்கைக்குரிய சற்குருநாதர் அஸ்ஸெய்யித் அஷ் ஷெய்க் கோயாத் தங்கள் (அப்துர்ரஷீத் தங்கள் வாப்பா) (قدس الله سره العزيز) அவர்கள்.

நபிகற்கரசரையும் வலிகற்கரசரையும் பாட்டனார்களாய்க் கொண்ட காமில் வலி அப்துர் ரஷீத் தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்கள் காருண்ய நபியின் 34 ஆவது தலைமுறையினராயும் கௌது நாயகத்தின் 17 ஆவது தலைமுறையினராயும் இப்பாரில் மலர்ந்தார்கள். தனது பாட்டனார் காதிர் வலி போன்றே தந்தைவழித் தொடரில் ஹஸனிய்யும் தாய்வழித் தொடரில் ஹுஸைனிய்யுமான தங்கள் வாப்பா அவர்கள் தங்களது நஸபுவழியில் நிரம்பவும் வலிமார்களையும் பெரும் மகான்களையும் கொண்டவர்கள். அவர்களது சொந்த ஊரான அந்தரூத் தீவு ஸெய்யிதுமார்களும் வலிமார்களும் நிறைந்து வாழும் அருள் ஜொலிக்கும் பிரதேசம் என்பது யாவரும் அறிந்ததே.

எங்களது ஷெய்கு நாயகம் அவர்களின் முன்னோர்கள் இற்றைக்கு சுமார் இரு நூறு ஆண்டுகளாக இலங்கைத் தீபகற்பத்திற்கு ஆத்மீக தீனொளியேற்ற வருகை தந்துள்ளார்கள் என அறியக்கிடைக்கின்றது. அந்தவகையில் சங்கைக்குரிய **அஸ் ஸெய்யித் பரீட் வலியுல்லாஹ்** (قدس الله سره العزيز) அவர்கள் தரீக்கா வழிமுறையில் தீன் பணியாற்ற 1841 இல் இலங்கைக்கு வந்திருக்கின்றார்கள். அவர்களைத் தொடர்ந்து குதுபு நாயகம் அவர்களின் 11ஆவது தலைமுறை வாரிசான சங்கைக்குரிய **அஸ் ஸெய்யித் ஐத்ரூஸ் தங்கள்** (قدس الله سره العزيز) அவர்கள் வருகை தந்து தங்களது ஷெய்கவர்களின் ஆத்மஞானப் பணியைத் தொடர்ந்திருக்கின்றார்கள். 1851 இல் **அஸ் ஸெய்யித் ஐத்ரூஸ் தங்கள்** (قدس الله سره العزيز) அவர்கள் தங்களது மருமகன் **அப்துல் காதிர்** (قدس الله سره العزيز) அவர்களைத் தங்களது தரீக்காவின் ஷெய்காக அறிமுகம் செய்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து 1900 முதல் 1923 வரை **அஸ் ஸெய்யித் புகாரி தங்கள்** (قدس الله سره العزيز) அவர்களும் 1923 முதல் 1934 வரை அவர்களது மருமகன் **அஸ் ஸெய்யித் அலி பூக்கோயாத் தங்கள்** (قدس الله سره العزيز) அவர்களும் இப்புனித பணியின் ஷெய்குமார்களாயிருந்து செரன்டீபில் சூபிச விளக்கேற்றினார்கள். அதனை அடுத்து 1934 ஆம் ஆண்டு தொடக்கம் **அஸ் ஸெய்யித் அலி பூக்கோயாத் தங்கள்** (قدس الله سره العزيز) அவர்களின் மருமகன் **அஸெய்யித் யூசுப் குஞ்சிக்கோயாத் தங்கள்** (قدس الله سره العزيز) அவர்களும் அவர்களைத் தொடர்ந்து அவர்களது சகோதரர் **அஸ் ஸெய்யித் அப்துல் காதிரில் காதிரி** (قدس الله سره العزيز) அவர்களும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் தங்களது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்தேர்ச்சையாக வழங்கிவந்தார்கள். இவ்வாத்மஞானிகள் வரிசையில் எங்களது ஷெய்கு நாயகம் **அஸ்ஸெய்யித் அஷ் ஷெய்க் கோயாத் தங்கள் (அப்துர்ரஷீத் தங்கள் வாப்பா)** (قدس الله سره العزيز) அவர்கள் 1944 இல் தங்களது 13ஆவது வயதில் முதன்முதலில் இலங்கைக்கு தங்களது மாமா **அஸ் ஸெய்யித் அப்துல் காதிரில் காதிரி** (قدس الله سره العزيز) அவர்களுடன் வருகை தந்துள்ளார்கள். தங்கள் வாப்பா அவர்களது ஆத்மீகப் பரம்பரையினர் இலங்கைக்கு வருகை தந்த காலம் கடல் மார்க்கமாகவோ தரை மார்க்கமாகவோ போதுமான பயண வசதிகளற்றதும், பயண ஆபத்துக்களும் அசௌகரியங்களும் நிறைந்ததுமான காலம் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு விடயமாகும்.

தங்களது மாமாவின் மறைவை அடுத்து 1952 முதல் 1997 வரை தங்களது முன்னோர்களின் வழியில் எட்டாவது தலைமுறை ஷெய்காயிருந்து இலங்கையின் நாலாபுறங்களிலும் ஆத்மீக ஜோதியை ஏற்றினார்கள். காதிரிய்யா, ரிபாயிய்யா, ஜிஷ்த்திய்யா, ஷாதுலிய்யா போன்ற தரீக்காக்களின் ஷெய்காகத் திகழ்ந்த தங்கள் நாயகம் (قدس الله سره العزيز) அவர்கள் இலங்கையில் காதிரிய்யா மற்றும் ரிபாயிய்யா ஆகிய இரு தரீக்காக்களையே தங்களது இரு கண்களாய்ப் பேணி நடந்தார்கள். பாரெங்கிலும் இறையில்லங்களையும் தைக்காக்களையும் ராதிப் சபைகளையும் அமைத்ததில் தரீக்காக்களின் ஷெய்குமார்களுக்கே பெரும் பங்குண்டு. அந்தவகையில் தெஹிவளை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா அரபுக்கலாசாலை மாத்திரமன்றி, இலங்கையின் பல பாகங்களிலும் தரீக்காக்களின் அமல்களை நடாத்த தைக்காக்களையும், ராதீப் மஜ்லிஸ்களையும் கல்விக் கூடங்களையும் நிறுவி தங்களது முரீதீன்கள், முஹிப்பீன்களது ஆத்மீக வளர்ச்சிக்கு பெரிதும் உதவினார்கள்.

தங்களது வாழ்நாளில் சுமார் முக்கால் வாசியை இலங்கையிலேயே கழித்த ஷெய்கு நாயகம் (قدس الله سره العزيز) அவர்கள் தங்களது முன்னோர்களுள் அதிக காலம் இலங்கையில் தொண்டாற்றி தரீக்கா வழியில் தீனுல் இஸ்லாத்துக்கு புத்துயிர் அளித்தவர்களாகக் காணப்படுகிறார்கள். தான் கண்ணாய் மதித்த இரு தரீக்காக்களதும் தலைவர்களான குதுபுல் அக்தாப் கௌதுல் அ.ழம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (قدس الله سره العزيز) அவர்கள் பெயராலும் சுல்தானுல் ஆரிபீன் அஷ்ஷெய்க் அஹ்மத் கபீர் அர் ரிபாயி (قدس الله سره العزيز) அவர்கள் பெயராலும் ராதீபுகளையும் மனாகிபுகளையும் கந்தூரிகளையும் ஆரம்பித்து அவற்றில் மறைஞான உபதேசங்கள் பல புரிந்து மக்களின் ஆத்மீகத் தாகம் தீர்த்த மாபெரும் மகானாகத் திகழ்கிறார்கள்.

தங்களது ஆத்மீகப் பயணத்தில் தங்கள் நாயகம் அவர்களிடமிருந்து வெளியான அற்புதங்களும் கராமத்துக்களும் வலிமார்களுள் இவர்களது மேதகு நிலையை எடுத்தியம்புகின்றன. ஆன்மீக வைத்தியத்தில் அவர்களுக்கு வல்ல நாயன் வழங்கிய அற்புத ஆற்றலால் பயன்பெற்றோர் அநேகர். தீராப் பிணிகளென வைத்தியர்களால் கைவிடப்பட்ட உடல், உள வியாதிஸ்தர்களை ஆரவாரமின்றி தீர்த்து விடுவதில் வித்தகராகக் காணப்பட்டார்கள். தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்கள் இலங்கை மக்களுக்கு ஆற்றிய சேவைகள் இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவை. காங்கேயனோடை, படுபிடிய, காத்தான்குடி முகைதீன் தைக்கா, அக்கரைப்பற்று ஆலங்குளம், அல்பிட்டிய, பதியத்தளாவ, தந்துற, மடுகல்ல, மாகோ உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களால் நட்டுவைக்கப்பட்ட விஷமுறிஞ்சும் அற்புதக் கற்களால் பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்களின் தீண்டலினால் ஏற்படுகின்ற அநாவசிய மரணங்கள், வீண் அசௌகரியங்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. இன்று வரை அக்கற்கள் மூலம் அனைத்து இன மக்களும் பயன்பெறுவது என்பது இலகுவாக எண்ணிக் கடந்து செல்லும் விடயமல்ல. இன்றிருப்பது போன்று மருத்துவமும் வைத்தியசாலைகளும் வளர்ந்திராத அதேவேளை காடுகளும் கமத்தொழிலும் நிறைந்து காணப்பட்ட அக்காலங்களில் இக்கற்களின் பெறுமதியும் முக்கியத்துவமும் பெரிதும் உணரப்பட்டன. இவை தவிர அல்பிட்டியில் வாதநோய்களிலிருந்து விமோட்சனம் பெறவென தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்கள் வைத்துள்ள வாதக்கல் ஏனைய விஷக் கற்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டியதொரு நற்பணியாகும். இவ்வாறு தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களது அற்புதங்கள் அள்ள அள்ள வற்றா ஊற்றைப் போன்றதாகும். அவற்றை இச்சிறு ஆக்கத்தில் உள்ளடக்கிட முடியாது. இவ்வுலகில் பற்றற்று, புகழை விரும்பாது வாழ்ந்ததால், மறைவுக்குப்பின்னும் தனது புகழ் அதிகம் பேசப்பட தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்கள் விரும்பவில்லையோ என்னவோ அவர்களின் அற்புதங்களையும் கராமத்துக்களையும் இதுவரை எவராலும் நிரப்பமாக எழுதித் தொகுத்திட இயலவில்லை என்று எண்ணத்தோனுகின்றது. ஆயினும், தங்கள் நாயகம் (قدس الله سره العزيز) அவர்களின் நெருக்கத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் அவர்களின் அந்தஸ்தையும் கராமத்துகளையும் நிரம்ப அனுபவித்திருக்கின்றார்கள், இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மாத்திரம் வெள்ளிடைமலையாகும்.

தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களின் அரும்பெரும் அற்புதமாகவும் அளப்பெரும் சேவையாகவும் கௌது நாயகத்தின் (قدس الله سره العزيز) பெயர் சொல்லும் தெஹிவளை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாவைக் குறிப்பிடலாம். தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களின் ஞாபகச் சின்னமாகவும் அவர்களின் சேவைகளின் தலைமையகமாகவும் இலங்கும் மெஞ்ஞான பீடமாம் அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களின் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட பெருமுயற்சியாலும் கடின உழைப்பாலும் கட்டியெழுப்பப்பட்டதாகும்.

தலைநகரில் பெரும்பான்மை இன மக்கள் செறிந்து வாழக்கூடிய பகுதியில் ஒரு காணித்துண்டைப் பெற்றுக்கொள்வதென்பதே மிகப்பெரும் சவாலான விடயமென்பது யாவரும் அறிந்ததே. அதுவும் கட்டிட நிர்மாணங்களுக்குப் பொருத்தமில்லாத சதுப்பு நிலமாக அந்நேரத்தில் காணப்பட்ட அக்காணியைச் செப்பனிட்டு நிர்மாணப்பணிகளுக்கேற்ற வகையில் நிரப்பி தயார்படுத்துவதும் சவாலாகவே காணப்பட்டது. இவற்றையெல்லாம் தாண்டி இன்று சகல பௌதீகவசதிகளுடன் பல மாடிக் கட்டடங்களையும் சீரான ஆத்மீகச் சூழலையும் கொண்ட கல்விக்கூடமாய்; இலங்கைத் தீபகற்பத்தில் புற எழிலும் அகவொளியும் தன்னகத்தே கொண்ட ஆத்மஞானக் கோட்டையாய் மின்னிக்கொண்டிருக்கும் மெஞ்ஞானபீடத்தை தங்கள் நாயகம் (قدس الله سره العزيز) அவர்களின் அற்புதமன்றி எவ்வாறழைப்பது? வருடாவருடம் பல ஹாபிழ்களையும் ஆலிம்களையும் உருவாக்கி சுன்னத் வல் ஜமாஅத்துக்கும் தங்கள் நாயகத்தின் (قدس الله سره العزيز) தரீக்காக்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிவரும் கௌதிய்யாவெனும் அணையாச்சுடர் யுகமுடிவு நாள் வரை ஒளிபரப்பி முரீதீன்கள், முஹிப்பீன்களின் ஆத்மீகப் பசி தீர்க்கும் கேந்திர ஸ்தலமாய் இலங்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. “அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா குதுபு நாயகத்தின் (قدس الله سره العزيز) கப்பல் ஆகும். இதில் ஏறியவர் ஜெயம்பெற்றனர்.” என்ற தங்கள் வாப்பாவின் (قدس الله سره العزيز) கூற்று இங்கு நினைவுகூரப்பட வேண்டியதும் ஆழமாக சிந்திக்கப்படவேண்டியதுமாகும்”.

எங்கள் இரட்சகனே! தங்கள் வாப்பா (قدس الله سره العزيز) அவர்களின் 25 ஆவது மனாகிப் அண்மித்துக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவர்களின் அருளாலும் ஆசியாலும் உளச்சுத்தி பெற்று, அம்மாரத்தைக் களைந்து, குதுபு நாயகத்தின் கப்பலிலேறி உன் ரிழாவும் திரு லிகாவும் பெற்று, முத்மயின்னத்தை அடையும் நன்மக்களாக எங்களனைவரையும் கபூல் செய்தருள்வாயாக.
ஆமீன்.